# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 166 | சனிக்கிழமை Saturday | 12.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# லண்டன் சென்றடைந்தார் முதலமைச்சர் விஜய்

## பிரிட்டன் வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு



லண்டன் சென்றடைந்தார் முதல்வர் விஜய்; பிரிட்டன் வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு தமிழ்நாட்டின்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்-அமைச்சர் விஜய் செப்டம்பர் 10 முதல் 16 ஆம் தேதி வரை இங்கிலாந்து பயணம் மேற்கொள்கிறார்.

நேற்று இரவு லண்டன் புறப்பட்டார். முதல்-அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு விஜய் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

நேற்றிரவு சென்னை விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட விஜய் துபாய் சென்று அங்கிருந்து லண்டன் புறப்பட்டார்.

இந்த நிலையில், முதல்-அமைச்சர் விஜய் லண்டன் சென்றடைந்தார். அங்கு முதல்-அமைச்சர் விஜய்க்கு இங்கிலாந்து வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கார் பந்தயத்தை தொடங்கி வைக்கிறார்

நேற்று (செப்டம்பர் 10) சென்னையிலிருந்து புறப்பட்ட முதல்-அமைச்சர் விஜய் தலைமையிலான குழு வரும் செப்டம்பர் 17 ஆம் தேதி நாடு திரும்பும். அவரது குழுவில், விளையாட்டு துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் செயலர் மேகநாதரெட்டி, தொழில் துறை வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தீபக் ஜேக்கப் மற்றும் அரசு அலுவலர்கள் இடம்பெற்றிருக்கின்றனர்.

இந்த அரசுமுறைப் பயணத்தின் ஒரு பகுதியாக, பிரிட்டனில் அஜித்குமார் பங்கேற்கும் 'Michelin Le Mans Cup' கார் பந்தயத்தை முதல்-அமைச்சர் கொடியசைத்து தொடங்கிவைக்க உள்ளார்.

கடந்த 1992-ஆம் ஆண்டு சென்னை லயோலா கல்லூரியில் படித்த காலத்திலிருந்தே (92 பேட்ச்) விஜய்யும் விஷ்ணு ரெட்டியும் நெருங்கிய நண்பர்களாக இருந்து வருகின்றனர். 34 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடரும் இந்த லயோலா நட்பைப் பதவியில் இருக்கும்போதும் விஜய் விட்டுக்கொடுக்காமல் மதிப்பளித்து வருவது குறித்துப் பலரும் சமூக வலைதளங்களில் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

# டெல்லியில் பிரதமர் மோடி, புதின் சந்திப்பு; 2030க்குள் வர்த்தகத்தை 100 பில்லியன் டாலராக உயர்த்த இலக்கு



புதுடெல்லி: பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்க வருகை தந்துள்ள ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து இரு தரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடினார்.

18-வது பிரிக்ஸ் உச்சி மாநாடு புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நாளை தொடங்க உள்ளது. இதில், பிரிக்ஸ் கூட்டமைப்பின் 11 உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்க இருக்கிறார்கள். மேலும், பார்வையாளர்களாக சுமார் 10 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாளை மறுநாள் இந்த மாநாடு நிறைவடைய உள்ளது.

மாநாட்டில் பங்கேற்பதற்காக புதுடெல்லி வந்துள்ள ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், பாரத் மண்டபத்தில் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூலை பிரதமர் மோடி அதிபர் புதினுக்கு பரிசளித்தார்.

இந்தியா-ரஷ்யா இருதரப்பு வர்த்தகம் தற்போது 60 பில்லியன் டாலராக உள்ளது. இதை 2030-ம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலராக உயர்த்த இரு நாடுகளும் இலக்கு நிர்ணயித்துள்ளன. இதைகருத்தில்கொண்டு, அதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை மேற்கொள்வார்கள் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக, டெல்லியில் நடைபெற்ற சர்வதேச தொழில்துறை கண்காட்சியான INNOPROM India 2026-ல் வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயலுடன், ரஷ்ய தொழில்துறை மற்றும் வர்த்தகஅமைச்சர் அன்டன் அலிகானோ பங்கேற்றார்.

நிகழ்ச்சியில் பேசிய பியூஷ் கோயல், இரு தரப்பு வர்த்தகத்தை 100 பில்லியன் டாலராக உயர்த்த அடுத்த 4 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 40 பில்லியன் டாலரைச் சேர்க்க வேண்டும். இதற்கு ஆண்டுதோறும் இரட்டைஇலக்கவளர்ச்சியை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

ரயில் மற்றும் சுரங்கப்பாதை துறைகளில் ஒத்துழைப்பைவிரிவுபடுத்துவது, எஃகு மதிப்புச் சங்கிலியை மேம்படுத்துவது, இருதரப்பு வர்த்தக வாய்ப்புகளை அதிகரிக்கச்செய்வது குறித்து பிரதமர் மோடியும் அதிபர் புதினும் ஆலோசிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவு ஒன்றில், நாளை தொடங்க உள்ள 18-வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டுக்காக உலகெங்கிலும் உள்ள தலைவர்கள் புதுடெல்லியில் கூடுகிறார்கள். உலக நலனை முதன்மை நோக்கமாகக் கொண்டு பல்வேறு விவகாரங்கள் குறித்த ஆக்கப்பூர்வமான, அர்த்தமுள்ள விவாதங்கள் இந்த மாநாட்டில் நடைபெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# திமுக கூட்டணியில் இருந்து விசிக வெளியேற காரணம் இதுதான்: திருமாவளவன் பேச்சு



கூட்டணி உடைவதற்கு திமுகவின் அணுகுமுறைதான் காரணம் என திருமாவளவன் பேசியுள்ளார்.

திமுகவின் தோல்விக்கு காரணம்

விசிக தலைவர் திருமாவளவன், திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசியதாவது;

தவெகவை குறைத்து மதிப்பிட்டதுதான் திமுகவின் தோல்விக்கு காரணம். விஜய் ஆர்.எஸ்.எஸ். பெற்றெடுத்த பிள்ளை என பேசினேன். ஆனால் அவர் அதிமுக, பாஜக, பாமகவிடம் ஆதரவு கேட்கவில்லை. நாங்கள் விமர்சித்தோம். ஆனால் விஜய் காங்கிரஸ் மற்றும் திருமாவளவனிடம் ஆதரவு கேட்டார். கவர்னர் ஆட்சி வந்துவிடக்கூடாது என இடதுசாரிகள் தவெகவுக்கு ஆதரவு அளித்ததால் விசிகவும் தவெகவுக்கு ஆதரவு அளித்தது.

விசிக கூடாரம் காலியாகிவிட்டதால் திருமாவளவன் விஜய்யின் பின்னால் சென்றதாக கூறுகிறார்கள். பதவிக்காக கூட்டணி மாறியதாக என் மீது வன்மத்தை கக்குகின்றனர். பதவி ஆசை இருந்திருந்தால் காங்கிரஸ் போனதுமே நானும் சென்றிருப்பேன். நான் எம்.எல்.ஏ.வாக இருந்திருந்தால் அமைச்சராக ஆசைப்பட்டு இருக்கமாட்டேன். என் நம்பகத்தன்மையை உடைக்க சிலர் முயற்சி செய்தனர். 2024ல் திமுக கூட்டணியில் இருந்து விசிக வெளியேற முயற்சித்தார்கள். ஆனால் கூட்டணி உடையாமல் காத்தேன்.

திமுகவின் அணுகுமுறையே காரணம்

திமுக - காங்கிரஸ் கூட்டணியில் நல்லிணக்கம் இல்லை. மதிமுகவை திமுக சின்னத்தில் நிற்க வைத்தீர்களே.. அவர்களுக்கு வருத்தம் ஏற்பட்டு இருக்காதா? கமலின் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு கூடுதல் தொகுதிகளை ஏன் வழங்கவில்லை.? புதிதாக ஒரு கட்சியை கொண்டுவந்து கூடுதலாக சீட் கொடுத்ததால் பிரச்சினை ஏற்பட்டது. விசிக, காங்கிரஸ், இடதுசாரிகள் கூட்டணியில் இருந்து விலகியதற்கு திமுகவின் அணுகுமுறையே காரணம். கூட்டணி கட்சிகளை திமுக கையாண்ட விதம்தான் தவறு என எந்த நியாயஸ்தர்களும் பேசவில்லை. திமுகதான் எங்களை கைவிட்டுவிட்டது. நாங்கள் கூட்டணியில் இருந்து வெளியேறவில்லை.

மேலும் பேசிய திருமாவளவன், "எனக்கு பதவி ஆசை இருந்திருந்தால், காங்கிரஸ் போனதுமே திமுக கூட்டணியில் இருந்து வெளியேறி இருப்பேன். விஜய் கூப்பிட்டார். நீங்கள் வாருங்கள். அமைச்சராகுங்கள் என்று சொன்னார். நான் மறுத்துவிட்டேன். கம்யூனிஸ்டுகள் அறிவித்த போதே சொல்லியிருப்பேன். வெளியே இருந்து தான் ஆதரவு என்று முதலில் சொன்னேன். ஆனால் 19 நாட்களுக்கு பிறகு என்ன நடந்தது?

மதச்சார்பற்ற என்று இருந்தால்தான் பாஜக அல்லாத கூட்டணியாக இருக்கும். எனவே கூட்டணியின் பெயரில் மதச்சார்பற்ற எனும் வார்த்தையை சேர்க்க வேண்டும் விஜய்யிடம் கூறினேன்."

மேலும் பேசிய திருமாவளவன், "எனக்கு பதவி ஆசை இருந்திருந்தால், காங்கிரஸ் போனதுமே திமுக கூட்டணியில் இருந்து வெளியேறி இருப்பேன். விஜய் கூப்பிட்டார். நீங்கள் வாருங்கள். அமைச்சராகுங்கள் என்று சொன்னார். நான் மறுத்துவிட்டேன். கம்யூனிஸ்டுகள் அறிவித்த போதே சொல்லியிருப்பேன். வெளியே இருந்து தான் ஆதரவு என்று முதலில் சொன்னேன். ஆனால் 19 நாட்களுக்கு பிறகு என்ன நடந்தது?

எனது கொள்கைப் பிடிப்பிற்காக, ஒரு எளியவன் அமைச்சராவதை தடுக்க கூடாது என்று உள் மனம் சொன்னது. அதனால் அந்த முடிவை எடுத்தேன். என்னோடு 30 ஆண்டுகளாக விசுவாசமாக இருந்த தம்பிக்கு அந்த பதவியை கொடுத்தேன்.

நான் எம்எல்ஏவாக இருந்திருந்தால், அமைச்சராக இல்லை, வேறு வாய்ப்பியிருந்திருக்கும். அது வேறு. அதன் பிறகு வன்னி அரசை அழைத்து, உனக்கு ஆசை இருக்கா? என்று கேட்டேன். உங்கள் விருப்பம் என்று சொன்னார். அதன் பிறகு திருமாவளவனை நம்பிய தம்பி 10 நாளாவது அமைச்சராக இருக்கட்டும் என முடிவெடுத்தேன்" என்றார். தவெககூட்டணியில் காங்கிரஸ் இணைந்ததை துணிச்சலான முடிவு என்றேன். கூட்டணிக்கு கூட, மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றி கூட்டணி என்று நான்தான் சொன்னேன். மதச்சார்பற்ற என்பது கண்டிப்பாக வேண்டும். அதுதான் பாஜக எதிர்ப்பு நிலை என்றதும் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்" என்றும் திருமாவளவன் பேசினார்.


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# பட்டிமன்ற நடுவரும், பேராசிரியருமான சாலமன் பாப்பையா காலமானார்



மதுரை: மதுரையைச் சேர்ந்த தமிழ் ஆர்வலரும், பட்டிமன்ற நடுவருமான பேராசிரியர் சாலமன் பாப்பையா உடல்நலகுறைவால் காலமானார். அவருக்கு வயது 90.

மாநகராட்சிபள்ளியில் படித்த சாலமன் பாப்பையா, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்த் துறை பேராசிரியாக பணிபுரிந்தவர். மதுரை ஞானஒளிவுபுரத்தில் குடும்பத்துடன் வசித்து வந்தார். இனிய தமிழில் எல்லோரையும் கவரும் வகையில் நகைச்சுவையாக பேசுவதில் அவர் திறமை வாய்ந்தவராக இருந்தார்.

சமூகத்திலும், ஒவ்வொருவரது வீடுகளிலும் நடக்கும் நிகழ்வுகளை மையமாகக் கொண்டு பட்டிமன்றங்களை சுவாரசியமாக நடத்துவதில் வல்லவர். பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்து, கடல் கடந்தும் தமிழ் மொழியை வளர்த்தவர். பேச்சாற்றலால் மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்த சாலமன் பாப்பையா, சில திரைப்படங்களிலும் நடித்து மக்கள் மனதை கவர்ந்தார்.

இந்திய அரசின் நான்காவது மிக உயரிய விருதான பத்மஸ்ரீ விருது 2021-ஆம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்டது.

நெஞ்சு வலி காரணத்தால் மதுரையில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி இறந்தார்.

அவரது மறைவுக்கு தமிழ் ஆர்வலர்கள், முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் தங்கள் இரங்கலைப் பதிவு செய்து வருகிறார்கள்.

சாலமன் பாப்பையாவின் உடல் தற்போது அவரது ஞானஒளிவுபுரம் இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அங்கு பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் அஞ்சலி செலுத்துவதற்காக உடல் வைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து நாளை மதியம் 12 மணிக்குள் மதுரை தத்தனேரி மின் மயானத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட உள்ளதாக அவரது உறவினர்கள் மற்றும் உதவியாளர் ராஜா தெரிவித்துள்ளனர்.

ரஜினிகாந்த இரங்கல்: சாலமன் பாப்பையாவின் மறைவுக்கு நடிகர் ரஜினிகாந்த் இரங்கல் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைதளபதிவில், 'படித்தவரிடையே இலக்கியத் தரத்தில் இருந்த பட்டிமன்றத்தை பாமரர்களிடமும் ஜனரஞ்சகமாகக் கொண்டு சென்ற மாபெரும் தமிழ் ஆளுமை பேராசிரியர் சாலமன் பாப்பையாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்' என்று தெரிவித்துள்ளார்,

தொடர்ந்து பேசிய அவர், "சாலமன் பாப்பையா தனது வாழ்நாள் முழுவதும் சாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு வாழ்ந்தவர். பெரியார் கொள்கையில் ஈடுபாடு கொண்டிருந்தவர். பல்வேறு அரசியல் தலைவர்களுடன் நெருங்கிப் பழகியவர்.

தனது உடல் அடக்கம் செய்யப்படாமல் தகனம் செய்யப்பட வேண்டும் என்பதில் அவர் தெளிவாக இருந்தார். அதன்படியே இறுதிச்சடங்குகள் நடைபெறும். நாளை (செப்.12) மதியம் 12.00 மணிக்குள் மதுரை தத்தனேரி மின் மயானத்தில் அவரது உடல் தகனம்செய்யப்படஉள்ளது. தமிழுக்கும், பட்டிமன்றக் கலைக்கும், சாலமன் பாப்பையா ஆற்றிய பங்களிப்பைக் கருத்தில் கொண்டு அவரது இறுதிச்சடங்கின்போது அரசு மரியாதை வழங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

# ஈரோடு ஜான்சன் ஹெல்த் மருத்துவமனையில் டிஎல்ஆர் தொழில்நுட்பத்துடன் கூடிய முதல் ஃபுஜிஃபிலிம் எகலான் ஸ்மார்ட் எம்.ஆர்.ஐ.



ஈரோடு:ஈரோடு ஜான்சன் ஹெல்த் மருத்துவமனையில், டீப் லேர்னிங் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட டிஎல்ஆர் வசதியுடன் கூடிய ஃபுஜிஃபிலிம் எகலான் ஸ்மார்ட் எம்.ஆர்.ஐ. அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஈரோடு மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்கு மேம்பட்ட எம்.ஆர்.ஐ. பரிசோதனை சேவைகள் எளிதில் கிடைக்கும்வாய்ப்பு உருவாகியுள்ளது.

இந்த நவீன எம்.ஆர்.ஐ. அமைப்பு, உயர்தரப் படங்களைப் பெறுதல், நோயாளிகளின் வசதி, நுண்ணறிவு தொழில்நுட்பம் மற்றும் திறமையான மருத்துவப் பணிப்பாய்வு ஆகியவற்றை ஒருங்கிணைத்துசெயல்படுகிறது. நரம்பியல், மூளை, முதுகெலும்பு, தசை-எலும்பு, வயிற்றுப் பகுதி, இடுப்புப் பகுதி, ஆஞ்சியோகிராஃபி உள்ளிட்ட பல்வேறு மருத்துவப் பரிசோதனைகளுக்கு இது பயன்படுகிறது. டிஎல்ஆர் (Deep Learning Reconstruction) தொழில்நுட்பம், டீப் லேர்னிங் மூலம் படங்களில் ஏற்படும் இரைச்சலைக் குறைத்து, தெளிவான இமேஜிங்கிற்கு உதவுகிறது. இதன் மூலம் துல்லியமானநோயறிதலுக்கு மருத்துவர்களுக்கு கூடுதல் ஆதரவு கிடைக்கிறது.

மேலும், மருத்துவமனையின் இமேஜிங் வசதிகளில் ஃபுஜிஃபிலிம் சுப்ரியா 32 சிடி அமைப்பும் இடம்பெற்றுள்ளது. வேகமான பரிசோதனைகள் மற்றும் திறமையான பணிப்பாய்வுக்கு இது உதவுகிறது.

எகலான் ஸ்மார்ட் எம்.ஆர்.ஐயுடன் சினாப்ஸ் 3டி மேம்பட்ட காட்சிப்படுத்தல் மற்றும் படப் பகுப்பாய்வு தளமும் இணைக்கப்பட்டுள்ளது. இது கதிரியக்கவியல், இருதயவியல், அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோயியல் உள்ளிட்ட பல்வேறு மருத்துவத் துறைகளில் 3டி மாதிரியாக்கம் மற்றும் படப் பகுப்பாய்வுக்கு ஆதரவளிக்கிறது.

இதுகுறித்து ஜான்சன் குழும நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் டி. என். திருக்குமார் கூறுகையில், "நோயறிதல் திறன்களை வலுப்படுத்துவதும், நம்பகமான மற்றும் மேம்பட்ட இமேஜிங் சேவைகளை நோயாளிகளுக்கு வழங்குவதும் எங்களின் முக்கிய நோக்கமாகும். ஃபுஜிஃபிலிம் எகலான் ஸ்மார்ட் எம்.ஆர்.ஐ. நிறுவப்பட்டுள்ளதன் மூலம், பரந்த அளவிலான மருத்துவப் பயன்பாடுகளில்துல்லியமான மற்றும் திறமையான நோயறிதலுக்கான எங்களின் திறன் மேம்பட்டுள்ளது. நோயாளிகளுக்கு அருகிலேயே மேம்பட்ட இமேஜிங் தொழில்நுட்பம் கிடைப்பது, சரியான நேரத்தில் மருத்துவ மதிப்பீடு மேற்கொள்ளவும், நோயாளிகளின் அனுபவத்தை மேம்படுத்தவும் உதவும்" என்றார்.

# பயோ மெட்ரிக் பதிவு இஸ்லாமியர்களை அச்சுறுத்துகிறதா காவல் துறை? காயல் அப்பாஸ் கடும் கண்டனம்





பயோ மெட்ரிக் பதிவு இஸ்லாமியர்களை அச்சுறுத்துகிறதா காவல் துறை ? காயல் அப்பாஸ் கடும் கண்டனம்

இது குறித்து மக்கள் எழுச்சி ஜனநாயக ககட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

நெல்லை மாவட்டம், மேலப்பாளயத்தில் லட்சக்கணக்கான இஸ்லாமிய மக்கள் அமைதியுடன் வசித்து வரும் நிலையில் எவ்வித சட்டப்பூர்வ அழைப்பாணையோ முறையான காரணமோ இன்றி அப்பகுதி மக்களைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று கண் ரேகை, கைரேகைகளைப் பதிவு செய்வது மனித உரிமையை மீறிய செலாகும்.

20 ஆண்டுகளுக்கு முன்பு நடந்து முடிந்து போனசிறிய இஸ்லாமிய சமுதாய வழக்குகளைக் காரணம் காட்டி, இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியை மட்டுமே குறிவைத்து இது போன்று பதற்றதை ஏற்படுத்தும் காவல் துறையினரின் இத்தகை செயல் கண்டிக்க தக்கதாகும்.

தமிழகத்தில் இஸ்லாமியர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் இது போன்ற அச்சுறுத்தலும் பதற்றத்தையும் காவல்துறையினர்ஏற்படுத்தி வருவது தொடர்ந்த வண்ணமாகநடைபெறுகின்றன. ஆகவே இஸ்லாமியர்களுக்கு இது போன்று அச்சுறுத்தலையும் பதற்றத்தையும் உருவாக்காத வகையில் இருக்கதமிழ்நாடுகாவல் துறைஇயக்குனர்மகேஷ் குமார் அகர்வால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பாக கேட்டு கொள்கிறோம்.

எனவே : இனி வரும் காலங்களில் இஸ்லாமியர்கள் வாழும் பகுதிகளில் அச்சுறுத்தலும் பதற்றமும் ஏற்படாமல் இருக்கதமிழக முதல்வர் ஜோசப் விஜய் உடனடியாக நடவடிக்கையை மேற்க்கொள்ள வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பில் வலியுறுத்தி கேட்டு கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

# பாரதியார், இம்மானுவேல் சேகரன் நினைவு தினம் முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் தலைமையில் தூத்துக்குடியில் வடக்கு மாவட்ட திமுக சார்பில் அஞ்சலி



தூத்துக்குடியில் பாரதியார் மற்றும் இம்மானுவேல் சேகரன் நினைவு தினத்தையொட்டி திமுக முன்னாள் அமைச்சர் பி.கீதா ஜீவன் மரியாதை செலுத்தினார். தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்கும், பெண்ணுரிமைக்கும்,சமூகநீதிக்கும் வித்திட்ட புரட்சிக் கவிஞன்,விடுதலைப்போரின் அக்னிக்குஞ்சு "மகாகவி பாரதியார் 105வது நினைவு தினத்தை முன்னிட்டும் மற்றும், சமூகநீதி, சமத்துவம் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக வாழ்நாள் முழுதும் போராடிய தியாகி இம்மானுவேல் சேகரன் 69வது நினைவு தினத்தை முன்னிட்டும் இவ்விரு தலைவர்களின் திருவுருவப்படத்திற்கும் வடக்கு மாவட்ட திமுக சார்பில் எட்டையாபுரம் சாலையில்உள்ளகலைஞர் அரங்கில் அலங்கரிக்கப்பட்ட அவர்களது படத்திற்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், துணை மேயர் ஜெனிட்டா, மண்டலத் தலைவர் பாலகுருசுவாமி, மாவட்ட அணி நிர்வாகிகள் மீனவரணி அந்தோணி ஸ்டாலின், மகளிரணி கவிதா தேவி, மாணவரணி சின்னதுரை, மருத்துவர் அணி அருண்குமார், ஐடி விங் பிரபு, அருணா தேவி நாகராஜன், மாநகர துணை செயலாளர் கீதா முருகேசன், கனகராஜ், மற்றும் சி.எஸ். முரளிதரன், கவுன்சிலர்கள் இசக்கிராஜா, விஜயகுமார், சரவணக்குமார், சந்திரபோஸ், ஜெயசீலி, பவானி, வைதேகி, மார்ஷலின், மகேஸ்வரி, மாநகர அணி நிர்வாகிகள் முருக இசக்கி, ஜெயக்கனி, சாரதி, பரமசிவன், ஐடி விங் அண்ணாதுரை, சுரேஷ்குமார். ராமச்சந்திரன், வினோத், ரூபராஜா, வட்டச் செயலாளர்கள் பாலகுருசாமி, கங்கா ராஜேஷ், மூக்கையா, சுப்பையா, கருப்பசாமி, டென்சிங், சக்திவேல், செந்தில்குமார், வட்டப் பிரதிநிதிகள் பாஸ்கர், ஜேசு பாலன் உட்பட ஏராளமானோர் பங்கேற்று மலரஞ்சலி செலுத்தினர்.

# உளுந்தூர்பேட்டையில் வி.ஏ.ஓ.விற்க்கு லஞ்சம் கொடுக்க பணம் இல்லாததால் பிச்சை எடுத்த விவசாயி



உளுந்தூர்பேட்டை அருகேபூர்வீகசொத்தின் கூட்டுப்பட்டாவில்பெயர் சேர்க்க கிராம நிர்வாக அலுவலர் லஞ்சம் கேட்டதாகக் கூறி, பணம் இல்லாததால் விவசாயி ஒருவர் உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் பொதுமக்களிடம் பிச்சை எடுக்கும் நூதனப் போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தாலுகாவிற்கு உட்பட்ட எலவனாசூர்கோட்டை வருவாய்கிராமம் நொணைவாடி பகுதியைச் சேர்ந்தவிவசாயி ஒருவர், தனது பூர்வீகச் சொத்துகளை கவனித்து வருகிறார். இந்நிலையில், அந்தச் சொத்தின் கூட்டுப்பட்டாவில்தனது பெயரைச் சேர்ப்பதற்காக சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரான (வி.ஏ.ஓ) அசோக்குமார் என்பவரை அவர் அணுகியுள்ளார்.

அப்போது, பட்டாவில் பெயர்சேர்ப்பதற்கு அதிக அளவில் வி.ஏ.ஓ லஞ்சம் கேட்டதாகக் கூறப்படுகிறது. ஏழை விவசாயியான தன்னிடம் பணம் இல்லாததால், லஞ்சம் கொடுக்க முடியாமல் அவர் மிகுந்த மனவேதனை அடைந்தார். அதிகாரியின் இந்தச் செயலால் விரக்தியடைந்த அவர், பொதுமக்களிடம் பிச்சை எடுத்து அந்தப் பணத்தை அதிகாரியிடம் லஞ்சமாகக் கொடுக்க முடிவு செய்தார்.

இதற்காக மஞ்சள் நிற பதாகை ஒன்றை கையில் ஏந்தியபடி உளுந்தூர்பேட்டை பகுதியில் அவர் நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டார். அவர் கையில் வைத்திருந்த பதாகையில், "வாழ்க தமிழ், ஒழியட்டும் ஊழல். நொணைவாடியில் பூர்வீக சொத்தில் கூட்டு பட்டாவில் பெயர் சேர்க்க வி.ஏ.ஓ அசோக்குமார் என்னிடம் லஞ்சம் கேட்டார். என்னிடம் பணம் இல்லை. அதனால் மக்கள் மத்தியில் பிச்சை எடுக்கிறேன். எனக்கு மக்கள் பிச்சை கொடுத்து உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.இப்படிக்குஏமாந்த தமிழன்" என்று தனது குமுறலை வெளிப்படுத்தியிருந்தார்.

அரசு அதிகாரி ஒருவர் லஞ்சம் கேட்டதால் மனமுடைந்த விவசாயி நடுத்தெருவில் பிச்சை எடுத்த இந்தச் சம்பவம் அப்பகுதி பொதுமக்கள் மத்தியில்பெரும்அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரி மீது மாவட்ட நிர்வாகம் உரிய விசாரணை நடத்தி கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விளக்கம் இது குறித்து துணைவட்டாட்சியரிடம் கேட்டபோது, உடனடியாக சம்பந்தப்பட்ட VAO-விடம்விசாரணைநடத்தி, மேல் அதிகாரிக்கு தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

# காலை உணவுத் திட்ட விரிவாக்கம்: நகராட்சி சார்பில் மாணவர்களுக்கு தட்டு, டம்ளர் வழங்கல்



தேவகோட்டை:தமிழக அரசின் காலை உணவுத் திட்டம், செப்டம்பர் 17 முதல் 6 முதல் 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் முன்னாள் முதல்வர் காமராஜர் காலை உணவு திட்டம் என விரிவுபடுத்தப்பட உள்ளது. இதையொட்டி, தேவகோட்டை நகராட்சி சார்பில் சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளிக்கு காலை உணவுத் திட்டத்துக்குத் தேவையான தட்டு, டம்ளர் உள்ளிட்ட தளவாடப் பொருட்கள் வழங்கப்பட்டன.

நகராட்சிசுகாதாரபணி மேற்பார்வையாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பணியாளர்கள் வள்ளி மற்றும் செல்லம்மாள் ஆகியோர் தளவாடப் பொருட்களை பள்ளித் தலைமையாசிரியர் சொக்கலிங்கத்திடம் வழங்கினர். திட்டத்திற்கான பெயர் பலகை நாளை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு தலைமையாசிரியர் சொக்கலிங்கம்தலைமை வகித்தார். விரைவில் திட்டத்தின் சோதனை ஓட்டம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில்

# முதல்வர் கோப்பை சதுரங்கப் போட்டி; மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி




தேவகோட்டை: சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில், முதல்வர் கோப்பைக்கான சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவ, மாணவியருக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமையாசிரியர் சொக்கலிங்கம் தலைமைதாங்கி, சிறப்புப் பயிற்சியைத் தொடங்கி வைத்தார். காரைக்குடி சதுரங்கப் பயிற்சி மையத்தின் பயிற்சியாளர்கள் சிவரஞ்சனி, சந்தியா, அதுலன் ஆகியோர் மாணவ, மாணவியருக்கு சதுரங்க விளையாட்டின் நுணுக்கங்கள் மற்றும் போட்டிகளுக்குத் தேவையான சிறப்புப் பயிற்சிகளை வழங்கினர். இதற்கான ஏற்பாடுகளை ஆசிரியை சிவரஞ்சனி, ஆசிரியர் ஸ்ரீதர் ஆகியோர் செய்து இருந்தார்கள் . முதல்வர் கோப்பைக்கான சதுரங்கப் போட்டியில் பங்கேற்கும் மாணவ, மாணவியர் விஜயகண்ணன், ஆகாஷ் குமார் , விஜய பாண்டி, நிகில், சரண்குமார், ரித்திகா, மாலினி ,நந்தனா ஆகியோருக்கு பள்ளி சார்பில் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.



# தூத்துக்குடியில் தியாகி இம்மானுவேல் சேகரன் 69வது நினைவு தினம்: மேயர் ஜெகன் பெரியசாமி மலர் அஞ்சலி

இம்மானுவேல் சேகரன் 69வது நினைவு தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக வாழ்நாள் முழுதும் போராடிய தியாகி இம்மானுவேல் சேகரன் 69வது நினைவுதினத்தை முன்னிட்டும் திருவுருவப்படத்திற்கும் திமுக சார்பில் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் கீதா ஹோட்டல் வளாகத்தில் வைத்து அலங்கரிக்கப்பட்ட அவர்களது திருவுருவப்படத்திற்கு மேயர் ஜெகன் பெரியசாமி மலர் தூவி மரியாதை செய்து வணங்கினார்.

நிகழ்ச்சியில் வட்ட கழக செயலாளர்களும் முன்னாள் மாமன்ற உறுப்பினர்களுமான ரவீந்திரன், ராஜாமணி, சாரதி, முன்னாள் வட்ட கழக செயலாளரும்

மாநகர சுற்றுசூழல் அணி அமைப்பாளருமான பார்த்தசாரதி, மாவட்ட மின்வாரிய தொமுச தலைவர் பேச்சிமுத்து, முன்னாள் வட்ட கழக செயலாளரும் முன்னாள் மாமன்ற உறுப்பினருமான பெரியசாமி, மாவட்டபிரதிநிதி நாராயணன், முன்னாள் மாநகர விவசாய அணி துணை அமைப்பாளர் ஆவுடையப்பன்,

வட்ட கழக செயலாளர் சுரேஷ், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ராமர், வட்ட கழக துணை செயலாளர் கணேசன், பஸ்பர் கிணறு கழக நிர்வாகி வேல்சாமி மற்றும் இளைஞரணியினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் முன்னிலையில் தவெக நிர்வாகிகள் 50க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்



தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்டோர் முன்னாள் அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான கீதாஜீவன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

மேட்டுப்பட்டி 8-வது வார்டு முத்தரையர் காலனியைச் சேர்ந்த தவெக துணைச் செயலாளர் முனியப்பா தலைமையில், அப்பகுதியைச் சேர்ந்த த.வெ.க நிர்வாகிகள் திமுகவில் இணைந்தனர். முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்க பொருளாளரும், முனியசாமி கோவில் தர்மகர்த்தாவுமான எஸ்.ஆர். சந்தனராஜ் , தூத்துக்குடி அண்ணா சங்குகுளி சங்கத் தலைவர் இசக்கிமுத்து ஆகியோர் முன்னிலையில் இந்த இணைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

திமுகவில் இணைந்த அனைவரையும் முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் திமுககட்சிசால்வை அணிவித்து வரவேற்றார்.

நிகழ்ச்சியில் பேசிய கீதாஜீவன், "திமுக எப்போதும் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு அரணாக விளங்கி வருகிறது. திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கட்சியின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு இணைந்த அனைவரையும் அன்போடு வரவேற்கிறேன். வரும் காலங்களில் திமுகவின் கொள்கைகளை மக்களிடம் எடுத்துச் சென்று, தளபதி மு.க.ஸ்டாலினை மீண்டும் தமிழக முதல்வராக அரியணையில் அமர்த்த அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம்" என்றார்.

இந்நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், 15-வது வார்டு கவுன்சிலர் இசக்கிராஜா, முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்கம், அண்ணா சங்குகுளி சங்க நிர்வாகிகள் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இமானுவேல் சேகரனின் 69 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு

# ராமநாதபுரத்தில் உள்ள அவரது மணிமண்டபத்திற்கு மரியாதை செலுத்துவதற்காக தேனியில் இருந்து புறப்பட்டுச் சென்ற தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தினர்

தேனியில் சுதந்திரப் போராட்ட தியாகி இமானுவேல் சேகரனுக்கு வெண்கல திருஉருவச் சிலைநிறுவப்படவேண்டும் என கோரிக்கை வைத்தனர்

சுதந்திரப் போராட்டத் தியாகி இமானுவேல் சேகரனின் 69 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டம்பரமக்குடியில் உள்ள அவரது மணிமண்டபத்திற்கு மரியாதை செலுத்துவதற்காக தமிழகம் முழுவதும் பல்வேறு அமைப்புகள் சார்பில் செல்கின்றனர்



இதன் ஒரு பகுதியாக தேனி மாவட்ட தமிழக மக்கள் முன்னேற்ற கழகம்சார்பில்தேனிபழைய பேருந்து நிலையத்தில் தியாகி இமானுவேல் சேகரனின் உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்

பின்னர் தேனி, அல்லிநகரம், ஆண்டிபட்டி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கார்களில் ஊர்வலமாக சென்று பரமக்குடியில் உள்ள அவரது மணிமண்டபத்திற்கு மரியாதை செலுத்த உள்ளனர்

முன்னதாகசெய்தியாளர்களைசந்தித்துபேசிய தமிழக மக்கள் முன்னேற்றக் கழக தேனி கிழக்கு மாவட்ட செயலாளர் பாலா கூறுகையில்

தியாகி இம்மானுவேல் சேகரனுக்கு தேனியில் திருவுருவச் வெண்கல சிலை நிறுவப்பட வேண்டும் என பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வந்துள்ளோம் ஆனால் இதுவரை பரிசீலக்கப்படவில்லை

தற்போது வந்துள்ள தவெக அரசு தங்களது கோரிக்கைகளை பரிசீலித்து தேனியில் அவருக்கு திருஉருவச் சிலை நிறுவப்பட வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்

# இமானுவேல் சேகரன் நினைவு தினம்: மரியாதை செலுத்துவதற்காக மதுரை வந்த லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் பேட்டி



புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகவும், லட்சிய ஜனநாயககட்சியின் தலைவராகவுமான ஜோஸ் சார்லஸ் மார்டின் சென்னையில் இருந்து மதுரை விமான நிலையம் வந்தார் தொடர்ந்து செய்தியாளர் சந்தித்து கூறுகையில்;-

*எல்.ஜே.பி கட்சி வந்துதமிழகத்துலஎந்த மாதிரி இதுல இருக்கு?.*

நாங்க தமிழ்நாட்டிலும் ஸ்டார்ட் பண்ணி, தமிழ்நாட்டிலும் ஃபுல் வேகத்துல போயிட்டு இருக்கு. இப்ப நிறைய போஸ்டிங்ஸ் எல்லாம் ஆல்மோஸ்ட் முடிஞ்சிருச்சு. 500-க்கும் மேல போஸ்டிங்ஸ் நாங்க போட்டுட்டோம். இன்னும் கட்சி செயல்பாடுகள்ல தீவிரமா இருக்கு. அடுத்து உள்ளாட்சி தேர்தலுக்கு நாங்க தயார் ஆகிட்டு இருக்கோம்.

* இடைத்தேர்தலில் வந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வந்து தவெக கோடா ஆதரவு*

அவங்களுக்குள்ளேயே ரொம்ப குழப்பமா இருக்கு. ஏன்னா இங்க அவங்க எதிர்த்துட்டு இருக்காங்க, அங்க ஆதரவு தெரிவிக்கிறது உண்மையிலேயே ஒரு பெரிய குழப்பத்தை தான் உண்டாக்கிட்டு இருக்கு. காங்கிரஸ் கிட்டயே இங்க கேட்பாங்க. இருந்தாலும் கொஞ்சம் கன்பியூசிங்காகத்தான் இருக்கு. அவங்களுக்கே குழப்பமா தான் இருக்காங்க, என்னன்னு ஒரு தெளிவில்லாமல் தான் இருக்கிறாங்கள்.

*இந்த இடைத்தேர்தல் வெற்றி எந்த அளவுக்கு மாற்றத்தை தரும் புதுச்சேரில*

அது ஒரு பெரிய தாக்கம் ஒன்னும் இல்லை. ஃபுல் மெஜாரிட்டி இருக்குறதுனால, இதே தமிழ்நாட்டுல அதற்கு ஒரு பெரிய தாக்கம் இருக்கலாம். ஆனால் இப்ப நடவடிக்கைகள் மக்கள் நம்ம பார்த்துட்டு இருக்கோம் எல்லாருமே ஒரு 50-50 தான் இருக்கு. இங்கயும் எப்படி சூழ்நிலை மாறும்ங்கிறது நமக்கு தெரியாது.

*தமிழக இடைத்தேர்தலில் எல்.ஜே.பி போட்டியிடுமா*

இந்த இடைத்தேர்தலில் நாங்க போட்டியிடல. எங்களோட கட்டமைப்பெல்லாம் நாங்க ரெடி பண்ணிட்டு இருக்கோம். அடுத்து உள்ளாட்சி தேர்தலுக்காக நாங்க ரெடி ஆகிட்டு இருக்கோம்.

*தமிழ்நாட்டின் அரசியல் சூழ்நிலை எப்படி இருக்கு? சட்டமன்றக் கூட்டத்தொடர் விவாதங்களெல்லாம் எப்படி நீங்க பார்க்குறீங்க*

அதான், உடனே திமுக மேல அதிரடி நடவடிக்கை எல்லாம் எடுப்பேன்னு சொல்லித்தான் வந்தாங்க. இதுவரைக்கும் அந்த அதிரடி நடவடிக்கை... அதாவது எவிடென்ஸோட ஈடில இருந்து எல்லாமே டாக்குமெண்ட்டே சப்மிட் பண்ணிட்டாங்க. இந்த மாதிரி இவங்க இவ்வளவு ஊழல் பண்ணிருக்காங்கன்னு எல்லா ஆதாரத்தோட சப்மிட் பண்ணிட்டாங்க.

இதுக்கப்புறம் இவங்க ஒரு எஃப்.ஐ.ஆர் போட்டு அதை பிராசஸ் பண்றதுதான் அவங்க வேலை. அதுகூட இன்னும் தாமதமா பண்ணிட்டு இருக்காங்க. இன்னமும் படங்கள்ல வர்ற டயலாக்ஸ் மாதிரி தான் இருக்கே தவிர, இன்னும் உண்மையான ஒரு ஆக்ஷனை பார்க்க முடியல. மக்கள் எதிர்பார்த்தது வந்து கண்டிப்பா இந்த ஊழல் செஞ்சவங்க எல்லாம் தண்டிக்கப்படுவாங்கன்னு, ஆனா அது இன்னும் நடக்கல.

**எல்.ஜே.பி கூட்டணி அமைப்பதற்கான வாய்ப்புகள்*

கூட்டணி வந்து இப்ப எதுவும் சொல்ல முடியாது. கூட்டணிங்கிறது எப்பவுமே கடைசியில முடிவு பண்ணக்கூடிய ஒரு விஷயம். இப்ப வந்து நாங்களங்ககட்சிபணிகள், எங்களுக்கு அடிமட்ட தொண்டர்கள் எல்லாம் பேஸ்மென்ட் இன்னும் ஸ்ட்ராங் பண்ணிட்டு இருக்கோம். அப்படி இருக்கும்போது எங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும்போது, அதை கடைசியில போகும்போதுதான் முடிவு பண்ண முடியும். இதுபோக மத்த மாநிலங்கள்லயும் எங்களுக்கு ஆதரவு வந்துட்டு இருக்கு. சோ, ஃபர்ஸ்ட் தமிழ்நாடு, புதுச்சேரில நல்லா பேஸ் போட்டுட்டு அதுக்கப்புறம் மத்ததுல யோசிப்போம்.

*இந்த ஆட்சி எப்படி போயிட்டு இருக்கு?*

இன்னும் அதிரடியா ஆக்ஷன் இருக்கணும். இன்னும் சொல் டயலாக்ஸ்லயே இருக்கு, அது ஆக்ஷனா மாறணும்னு ஆசைப்படுறோம். என்றார்.

# மதுராந்தகம் சட்டப்பேரவை இடைத்தேர்தல் திமுக வேட்பாளர் பரந்தாமன் அறிமுக கூட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடை தேர்தலில்திமுகசார்பில் சட்டத்துறை மாநில துணை செயலாளர் ஐ. பரந்தாமன் போட்டியிடுவதாக நேற்றைய தினம் திமுக தலைமை அறிவித்திருந்தது. இந்நிலையில் மதுராந்தகத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.

இதில் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கலந்து கொண்டு வேட்பாளரை அறிமுகம் செய்து வைத்தார். இதில் காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ. அன்பரசன், தெற்கு மாவட்ட செயலாளர் சுந்தர் மற்றும் ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அப்போது பேசிய திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மதுராந்தகம் தொகுதியில் போட்டியிடுவது பரந்தாமன் இல்லை மு.க.ஸ்டாலின் தான் போட்டியிடுகின்றார், மு.க.ஸ்டாலினுக்கும், மதுராந்தகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இங்கு உள்ளவர்களை பார்க்கும் போது ஒவ்வொருவரின் முகத்திலும் கோபமும் எதிர்ப்பும் உள்ளது தெரிகிறது.

எமர்ஜென்ஸி பிரகடனப்படுத்தி ஆட்சியை கலைத்த போது, மிசா பற்றி இப்போதைய இளைஞர்களுக்கு தெரியாது. எங்களை போன்ற 80-வயதை கடந்தவர்களுக்கு தான் மிசாவின் கொடுமை தெரியும், இப்போதைய சூழலில் மிசாவை பற்றி மு.க.ஸ்டாலின், துரைமுருகன், டி.ஆர்.பாலு ஆகியோருக்கு மட்டுமே தெரியும்ஆனால்எவனோ எழுதி கொடுத்ததை சட்டமன்றத்தில் ஒரு தற்குறி பேசுகிறான் என முதல்வரை விமர்சனம் செய்தார். மேலும், நம் தலைவரை பற்றி பேசியவனுக்கு தக்க பாடம் புகட்ட நமக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. அதுவும் தமிழகத்தில் யாருக்கும் இல்லாமல் மதுராந்தகம் தொகுதி கட்சியினருக்கு கிடைத்திருக்கிறது. பெற்ற பிள்ளைக்கும் பொண்டாட்டிக்கும் சோறு போட வக்கு இல்லாதவன் இன்றைக்கு பேசுகிறான் சட்டமன்றத்தில் சினிமாவில் அவிழ்த்து போட்டு ஆடுவதைபோல ஆடுகிறாயே! என ஆக்ரோஷமாக கேள்வி எழுப்பினார்.

மிசா வரலாறு முதல் முதலில் மதுராந்தகத்தில் தான் துவங்கியது. நிச்சயமாக மதுராந்தகம் தொகுதியில் பரந்தாமன் வெற்றிபெறுவார் மதுராந்தகம் தொகுதியில் திமுக வெற்றி பெற்றால் ஜனவரி மாதம் குள் இந்த ஆட்சிகவிழும்எனதிமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி என பேசினார்.

மேலும் ,பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் செப்டம்பர் 15 ஆம் தேதி மதுராந்தகம் தொகுதி திமுக வேட்பாளர் பரந்தாமன் வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளார் மதுராந்தகம் திமுக வேட்பாளர் பரந்தாமன் பேசிய போது மதுராந்தகம் திமுக வெற்றி விழா தமிழக வெற்றிக்கழகத்தின் ஆட்சிக்கு மூடு விழாவாகஅமையும்என திமுக வேட்பாளர் பரந்தாமன் பேசினார்.



## மகாகவி பாரதியார் நினைவு தினம்: ஈரோட்டில் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

ஈரோடு: மகாகவி பாரதியாரின் நினைவு தினத்தை முன்னிட்டு, ஈரோடு கருங்கல்பாளையத்தில் அவர் கடைசியாக உரையாற்றிய நூலக வளாகத்தில் அமைந்துள்ள பாரதியார் சிலைக்கு தமிழ்மாநில காங்கிரஸ் கட்சியின் மாநில துணைத் தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான விடியல் எஸ். சேகர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, மூத்த தலைவர் எஸ்.டி. சந்திரசேகர் மற்றும் நிர்வாகிகள் புவனேஷ்வரன், ஓ.கே. கதிர்வேல், முஜகித் அலி, கோட்டை செந்தில், சின்னதுரை, சந்திரன், மகேஷ், லோகு உள்ளிட்டோர் பாரதியார் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு, மகாகவி பாரதியாரின் தேசப்பற்று, சமூக சிந்தனை மற்றும் தமிழ்ப்பற்றை நினைவுகூர்ந்தனர்.




ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் 40வது அமைப்பு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (11.09.2026) துவக்கி வைத்து, பார்வையிட்டார்.




ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், மீனாட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்ற தற்காலிக தூய்மைப்பணியாளர்களுக்கான சிறப்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (10.09.2026) அன்று பயனாளிக்கு மானியத்துடன் கூடிய கறவை மாட்டுக் கடனுதவியினை வழங்கினார். உடன் பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி. தமிழ்ச்செல்வி, சத்தியமங்கலம் நகர்மன்றத் தலைவர் ஜானகி ராமசாமி, மாவட்ட மேலாளர் (தாட்கோ) சீ.முருகவேல் உட்பட பலர் உள்ளனர்.

## Supreme Court weighs marital rape exception. Why is it a legal flashpoint ?



*The Supreme Court recently stirred the debate over the marital rape exception in the Indian penal statute by observing whether courts can punish a husband for committing rape on a wife, who is not a minor, against her consent when the law protects such acts.*

*At the core of this question lies a constitutional debate and a mix of facts and law emanating from two judgments – one by the Karnataka High Court in March 2022 that allowed the prosecution of a husband for rape regardless of the marital rape exception (Exception 2 to Section 375 of the Indian Penal Code) and another by the Delhi High Court delivering a split verdict in May 2022 on a clutch of public interest litigations challenging the Exception 2 to Section 375 IPC.*

*The issue travelled to the top court with both high courts' decisions being challenged by the aggrieved parties along with fresh petitions filed by non-profit organisations challenging the marital rape exception provided under Section 63 of the Bharatiya Nyaya Sanhita (BNS) which replaced the IPC.*

*The legal dispute and the scope of consideration before the top court require an understanding of the statute in question, the judicial approach so far, and the response by the Centre which reflects why Parliament has thought it fit to retain this provision, first when the criminal reforms were introduced in 2013 following the horrific Nirbhaya gangrape incident in Delhi, and again when the BNS was introduced to replace many archaic, colonial-era laws.*

*Exception 2 to Section 375 IPC states "Sexual intercourse or sexual acts by a man with his own wife, the wife not being under fifteen years of age, is not rape". Under BNS, the exception was retained with one change where the age of the wife was revised from 15 to 18 years (aligning with earlier judicial rulings). It must be noted that the original Section 375 only exempted "sexual intercourse" by husband with wife. The 2013 amendment added the words "or sexual acts".*



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு)யில் சாலைப்பணியாளராக பணியாற்றி பணியிடைகாலத்தில் உயிரிழந்த கி.முத்துமாணிக்கம் அவர்களின் வாரிசுதாரரான அவரது மனைவி மு.சாரதி அவர்களுக்கு கருணை அடிப்படையில் தற்காலிக துப்புரவு பணியாளராக பணி நியமனம் செய்ததற்கானபணிஆணையினைமாவட்டஆட்சியர்அலுவலகத்தில்மாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமி 10.09.2026 அன்று வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி ஆகியோர் உள்ளனர்.

## சேப்பாக்கம் பள்ளி அருகே சீமைக்கருவேல் மரங்கள் அகற்றம்



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள சேப்பாக்கம் ஊராட்சியில் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகே வளர்ந்திருந்த சீமைக்கருவேல் மரங்கள் அகற்றப்பட்டன. மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் நலன் கருதி, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்படியும், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின்படியும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதையடுத்து, பள்ளி வளாகத்தை ஒட்டிய பகுதிகளில் இருந்த சீமைக்கருவேல் மரங்களை அகற்றும் பணிகள் ஊராட்சி நிர்வாகத்தின் சார்பில் நடைபெற்றது.

ஊராட்சி செயலாளர் தங்க.சரவணன் முன்னிலையில் நடைபெற்ற இப்பணியை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பாக்கியலட்சுமி நேரில் பார்வையிட்டு, பணிகள் முறையாக நடைபெறுவதை கண்காணித்தார். பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக இருந்த மரங்கள் அகற்றப்பட்டதையடுத்து, அப்பகுதி தூய்மைப்படுத்தப்பட்டு பாதுகாப்பான சூழல் ஏற்படுத்தப்பட்டது.



2026 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆசிரியர் விருது பெற்ற திருவள்ளூர் மாவட்டத்தை சார்ந்த 13 ஆசிரியர்களான பொன்னேரி வட்டம் காட்டூர் அரசு ஆதி திராவிட நல தொடக்கப்பள்ளி, இடைநிலை ஆசிரியர் தி. இளங்கோவன், பூந்தமல்லி வட்டம் காட்டுப்பாக்கம் அரசு ஆதி திராவிட நல தொடக்கப்பள்ளி தலைமையாசிரியை ஆசிரியர்ல. காந்திமதி , திருத்தணி வட்டம் மைலார்வாடா ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் கே.பாபு, ஆவடி நகராட்சி உயர்நிலைப்பள்ளி ஆங்கில பட்டதாரி ஆசிரியை ச. மஞ்சு பார்கவி, ஆவடி காமராசர் அரசி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர் ச.சாய்பிரகாஷ், பொன்னேரி வட்டம் கல்பாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் த. விஜயலட்சுமி, பூந்தமல்லி ஒன்றியம் வயலாநல்லூர் இடைநிலை ஆசிரியர் க. முருகேஸ்வரி, திருத்தணி வட்டம் பெரியகடம்பூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி இடைநிலை ஆசிரியர் த. ஜெ. கோகுல்ராஜ், திருத்தணி வட்டம் டாக்டர் ராதாகிருஷ்ணன் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர் சு. லீலா மனோகரன், திருத்தணி வட்டம் பூனிமாங்காடு அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் வே. முருகன், பூந்தமல்லி செம்பரம்பாக்கம் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் க. ரவிச்சந்திரன், ஆவடி காமராஜர்நகர் ஆர.சி.எம் அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளி முதிகலை ஆசிரியர் சுவாமிநாதன் , ஆவடி நபி கிரசென்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் கா. கு.அப்சர் உசேன் ஆகியோரை திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கவிதா அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு அழைத்து பாராட்டி வாழ்த்தினார் பின்பு திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆர். அறிவழகன் அவர்களுக்கு விருது பெற்ற ஆசிரியர்கள் சார்பில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் நன்றி தெரிவித்து பொன்னாடை அணிவித்தார் நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்டக் கல்வி அலுவலர் அமுதா , திருவள்ளூர் மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் நிர்மல் குமார் , பொன்னேரி மாவட்டக் கல்வி அலுவலர் ( பொ) ஐயப்பன், பொன்னேரி தொடக்கக்கல்வி மாவட்ட அலுவலர் ( பொ) பன்னீர்செல்வம் , தனியார் பள்ளிகள் மாவட்டக் கல்வி அலுவலர லிங்கேஷ்வரன், பள்ளிக்கல்வித்துறை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் பவானி , மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் Monster உதவியாளர்கள் தண்டபாணி , தியாகு , பள்ளிகளின் துணை ஆய்வாளர் குமரவேலன் ஆகியோர் கலந்துக் கொண்டனர்

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.